விரிவானம்

இயல் ஒன்று

# ஆளுக்கு ஒரு வேலை
## (பொம்மலாட்டம்)

நுழையும்முன்

சொலவடைகள் என்பவை சிறுசிறு தொடர்களாக வட்டாரப் பேச்சு வழக்கில் வழங்கி வருபவை. இவை பேச்சுமொழியின் அழகியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருக்கும். பொருட்செறிவுமிக்க சொலவடைகளை நாட்டுப்புற மக்களும் தம் பேச்சில் இயல்பாகப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவது தொன்மை வாய்ந்த மொழிகளுக்கே உரிய தனிச்சிறப்பாகும். சொலவடைகளுடன் கூடிய நாட்டுப்புறக் கதை ஒன்றைப் பொம்மலாட்டமாகப் பார்ப்போம்.



கதைசொல்லி : பெரியோர்களே! தாய்மார்களே! குழந்தைகளே! நாம இன்னிக்கு 'ஆளுக்கு ஒரு வேலை' என்னும் கதையைப் பொம்மலாட்டமாப் பாக்கப் போறோம்.

இந்தப் பையன்தான் நம்ம கதைநாயகன். இவன் ஒழுங்காப் பள்ளிக்கூடம் போகாம ஊரைச் சுத்திக்கிட்டு வருவான். அவங்க அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கல. புண்ணுக்கு மருந்து போட முடியும்; புடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா? அவனோட புடிவாதத்தை யாராலும் மாத்த முடியல. ஒருநாள் அப்பா பையனக் கூப்பிடுறாரு.



7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 13 22/01/2025 17:35:16